**நாமல் ஓயா பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாமல் ஓயா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நாமல் ஓயா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன் சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கும் தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புதககங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஈடுபடுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் என்ன என்பது தொடர்பான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல்கள் ரூபா 602,566 அபிவிருத்தி கடன்கொடுத்தோரின் கீழ் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிழையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 126,900 பெறுமதியான டிஜிடல் தராசின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவு கணக்குகளின் மீண்டுவரும் வருமானங்களின் மொத்த மீதி ரூபா 466,203 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குவதன் (நடமாடும்) கீழ் கேரிக்கப்பட்ட ரூபா 158,550 வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் அபிவிருத்தி கடன்பட்டோர் மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் படியான அம்மீதிக்குமிடையே ரூபா 4,367,906 இணக்கமின்மை காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிழைகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செம்மையாக்காமைக்கான காரணத்தை தேடிப்பார்த்து சரி செய்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | பெறுமதி ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகனமும் வண்டிகளும் | 57,746,639 | (i) நாளதுவரையாக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2024 ஆம் ஆண்டின் போது சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்களும் உபகரணங்களும் | 52,464,256 | (i) நாளதுவரையாக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(ii) பட்டோலை | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 5,936,036 | (i) நாளதுவரையாக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (ii) பட்டோலை | | |
| (ஈ) | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் | 22,505 | (i) பட்டோலை<br>(iii) மீதிகளின் உறுதிப்ப டுத்தல்கள் | பட்டோலைகளைத் தயாரித்து 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும். | மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (EPF) அதிகாரச் சட்டம் மற்றும் 1980 இன் ஊழிய ர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (ETF) அதிகாரச் சட்டம் | மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் தொடக்க சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணம் கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்லவாண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 37,568 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 6,000 குறைத்து கணிப்பீடு செய்து நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெயவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசட்டத்தி லுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) 5 (12) ஆம் விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பு வகிக்கின்ற | ஒரு உத்தியோகத்தரிடமிரு ந்து பிணைப்பணம் | நிதி மற்றும் நிருவாக விதிகளின் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து போதியளவு பிணைப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | பெற்றுக்கொள்ளப்பட்டு ள்ளதுடன் ஏனைய உத்தியோகத்தர்களிட மிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 59 ஆம் மற்றும் 67 ஆம் விதி | சபையின் வருமான பரீட்சகரினால் சபையின் மீளாய்வினை நடாத்தி வணிக, வியாபார மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள் தொடர்பான பட்டியலைத் தயாரித்து ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iii) 218 ஆம் விதி | சபையின் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 3,095,029ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 40,005 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீத வரியும் வரியும் | 350,000 | 754,553 | 583,018 | 585,538 | 350,000 | 161,500 | 161,500 | 414,003 |
| ii. | வாடகை | 4,173,540 | 1,620,640 | 1,619,990 | 3,750 | 4,173,540 | 1,859,264 | 1,878,272 | 3,100 |
| iii. | அனுமதிப் பத்திர கட்டணம் | 837,000 | 546,550 | 546,550 | 22,505 | 837,000 | 393,945 | 393,945 | 22,505 |
| iv. | ஏனைய வருமானம் | 1,547,000 | 3,387,221 | 3,387,221 | 15,008 | 3,425.505 | 1,563.614 | 1,563,614 | 15,008 |
| மொத்தம் | | 6,907,540 | 6,308.964 | 6,136,779 | 626,801 | 8,786,045 | 3,978.323 | 3,997,331 | 454,616 |

### 2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவையான அறிவித்தல் பலகை வருமானம் ரூபா 585,538 ஆக இருந்ததுடன் அக்கட்டணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது அறிவித்தல் பலகையை கழற்றி அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் செலுத்தப்படவில்லையாயின் அறிவித்தல் பலகையை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டணத்தை அறவீடுசெய்வதற்கு அல்லது அறிவித்தல் லகையை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப்பயன்பாட்டு சேவைகள் மற்றும் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தலும் நிருவகித்தலும், மக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரிகள் முதலிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளங்கண்டு உப நியதிச்சட்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் | எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | உப நியதிச்சட்டங்களை விதிக்கும் நடவடிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை 05 உப நியதிச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | | சட்டமாக்குதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் 2023 ஆம் ஆண்டின் போது 186 தொன் கழிவுப் பொருட்கள் ரூபா 1,095,975 செலவு செய்து சேகரிக்கப்பட்டிருந்ததுடன் உக்குகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டில் 5441 கிலோகிராம் சேதனப் பசளைகள் தயாரிக்கப்பட்டு 4,366 கிலோ கிராம் விற்பனை செய்ததன் மூலம் ரூபா 87,321 வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது சேதனப் பசளைப் பாவனையை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தினைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் மாதாந்தம் சேகரிக்கப்படுகின்ற 21.3 தொன் அளவிலான உக்காத கழிவுப் பொருட்களானது கழிவுப் பொருள் நிலையத்தில் திறந்த நிலையில் கொட்டி எரித்து விடப்பட்டது என பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டதுடன் உக்காத கழிவுப் பொருட்களை மீள்சழற்சி செய்யும் ஒரு வேலைத்திட்டம் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | உக்காத கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்யும் வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு அடுத்துவரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | உக்காத கழிவுப் பொருட்களை மீள்சழற்சி செய்யும் வேலைத் திட்டத்தினை தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் உள்நாட்டு தானியங்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளை ஈடுபடுத்தி கால்நடை உணவு உற்பத்தி மற்றும் முட்டை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக கொள்வனவு செய்த ரூபா 3,388,674 பெறுமதியான இயந்திர மற்றும் உபகரண இருப்பு 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது எனவும் இப்பொருட்கள் பயன்படுத்தாதிருந்தும் அவற்றின் உத்தரவாத காலத்தில் 08 மாதங்கள் தற்பொழுது கடந்திருந்தன. | LDSP PT - 02 செயற்திட்டத்திற்குரிய நிதி ஏற்பாடு கிடைப்பது தாமதமடைந்ததனால் இந்நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. தற்பொழுது நிதி ஏற்பாடு கிடைத்து மேலதிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | கட்டிடத்தினை துரிதமாக நவீனமயப்படுத்தி இயந்திரங்களையும் உபகரணங்களையும் பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையில் காணப்படுகின்ற திருத்தம் செய்ய முடியாத 03 வாகனங்கள் 07 ஆண்டுகளிலிருந்து 23 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை | அந்த வாகனங்கள் சபையின் பெயருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காதத | வாகனங்களை பொறுப்பேற்று ஏலத்தில் விற்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாததன் காரணமாக துருப்பிடித்துக் காணப்பட்டன. | னால் ஏலத்தில் விற்க முடியாதுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அம்பாறை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த பிரின்டரின் பெறுமதி அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டின் போது பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையின் கட்டிடங்களின் பெறுமதி அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | பிரதேச சபையின் 15 மயானங்கள் மற்றும் 07 விளையாட்டு மைதானங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு ஆவணப்படுத்துவதற்கு அல்லது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | பிரதேச சபையின் டிரக்டர் டேலரின் பெறுமதி அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யப்பட்ட அந்த டேலருக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை உள்ளடக்கி கணக்குகளைத் தயாரிப்பதற்கு அடுத்துவரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற பினவரும் 07 வாகன விடயங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இயந்திரப் பொறியியலாளரின் பரீட்சிப்பு அறிக்கை கிடைத்ததன் பின்னர் அந்த வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக திருத்தம் செய்து பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | சபையில் காணப்படுகின்ற 05 வாகன விடயங்களை சபையின் பெயருக்கு பொறுப்பேற்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டிக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இன்றுவரை எங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனிதவளங்கள் ் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையின் 08 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | மாதாந்த அறிக்கையின் மூலம் இதுபற்றி உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வின் மூலம் சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் நிறுவன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக போதிய சிபாரிசுகள் தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் உட்டக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின்கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டிகள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை ஸ்தாபித்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கான நடைமுறையினை ஆரம்பித்து கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |